**செய்தி வெளியீடு எண் : 676** **நாள்: 27.04.2022**

**நீதிக்கட்சியின் முதன்மையான தலைவர் சர் பிட்டி தியாகராயர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு**

Dravidian Model எனும் மக்கள் நல நிர்வாகத்திற்கு அடித்தளமிட்ட நீதிக்கட்சியின் முதன்மையான தலைவரும், சென்னை மாநகராட்சியின் தலைவராகப் பணியாற்றியவரும், மாநகராட்சிப் பள்ளியில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திக் கல்விச் சுடரை ஏற்றியவருமான 'வெள்ளுடை வேந்தர்' சர் பிட்டி தியாகராயர் அவர்களின் பிறந்தநாள் இன்று!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்ற பெருமையைச் சென்னைவாசிகள் எனக்கு வழங்கியபோது, ரிப்பன் கட்டடத்தின் முகப்பில் உள்ள அவருடைய சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திப் பணியினைத் தொடங்கியதை நினைவில் கொள்கிறேன்.

தீரமிக்க திராவிடத் தலைவர் தியாகராயர் புகழ் போற்றி, அனைவருக்கும் அனைத்தும் என்ற இலட்சியத்துடன் மக்கள் நலப் பணியினைத் தொடர்கிறேன்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in